# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 8 | சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

April 2023 | தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் | விலை ரூ 5





**5 ஆகஸ்டு 2022 – 5 ஆகஸ்டு 2023**

**எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்**

**“ஒரு கம்யூனிஸ்ட் மக்களிடம் கொண்டுள்ள அன்பில் செயற்கைத் தன்மை ஏதுமில்லை. தனக்கு வேண்டியவர்களுக்கு, நெருங்கியவர்களுக்கு அவர் தனியாக அன்பு காட்டுவதில்லை. உண்மையில் அவர் மக்களிடம் கொண்டுள்ள அன்பையே அவர்களிடமும் வெளிப்படுத்துகிறார். பாட்டாளி வர்க்கத்தின்பால் அவர் கொண்டுள்ள எல்லையில்லா அன்பானது, அவருடைய ஆழ்ந்த நேர்த்தியான அன்பையும், நேசத்தையும், பரிவையும், கருணையையும் தனிமனிதவாதத்தின் குறுகிய எல்லைகளிலிருந்து முற்றாக விடுவித்து, புரட்சியின் லட்சியத்தோடு முழுமையாக அவரை ஐக்கியப்படுத்துகிறது”**

**“கம்யூனிஸ்டுகளுக்கும் அன்பும் பாசமும் உண்டு. அவர்களும் மென்மையான உணர்வுகளை, நட்பை, கருணையைப் போற்றிப் பாதுகாக்கவே விரும்புகிறார்கள். ஆனால், புரட்சிகர வாழ்க்கை வட்டத்திற்கு வெளியே இருப்பவை எவற்றையும் அவர்கள் நாடுவதில்லை”**

**– சிப்தாஸ் கோஷ்**

# இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் பின்னணி

*[தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டான இவ்வருடத்தை அனுசரிக்கும் வகையில் அவரது படைப்புகளிலிருந்து சில அம்சங்களை பிரசுரித்து வருகிறோம். அவ்வகையில், தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் “இந்தியாவில் கலாச்சார இயக்கமும் நமது கடமைகளும்” என்ற தலைப்பில் ஆற்றிய உரையின் ஒரு சிறிய பகுதியை இங்கு வழங்குகிறோம்.]*

### இந்திய மறுமலர்ச்சியின் சமூக அரசியல் பின்னணியும் அதன் இரண்டு போக்குகளும்

முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில்தான் நவீன தேசங்களும் தேசிய அரசுகளும் உருவாயின என்பதை வரலாறு மற்றும் சமூக அறிவியலின் ஒவ்வொரு மாணவரும் அறிவர். இந்திய தேசியவாதத்தின் வளர்ச்சியும் முன்னேற்றமும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்று நாம் கூறுகின்ற தேசபக்தி என்பது நீண்ட நாட்களுக்கு முன்பு உருவானதல்ல. பண்டைய இந்தியாவில் தேசபக்தி என்ற உணர்வும் கோட்பாடும் இல்லை. நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது உருவாவதற்கான சாத்தியமும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் தேசிய முதலாளித்துவப் பொருளாதாரம் வளராமல் நாம் பேசுகின்ற தேசபக்தி என்பது வளர முடியாது. நாடு முழுவதும் மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரம் பிரிட்டிஷ் ஆட்சியால் உருவாக்கப் பட்ட பின்னர்தான் அனைத்துத் தேசிய இனங்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு ஒரு நவீன தேசமாக உருவாகும் போக்கிற்குள் இந்தியா அடியெடுத்து வைத்தது. மிகச்சரியாக, இந்த காலகட்டத்திலிருந்துதான் மத்தியப்படுத்தப்பட்ட நவீன நிர்வாகத்தை நடத்தவேண்டிய தேவையின் அடிப்படையில், ரயில், சாலைத் தொடர்புகள் நாடுமுழுவதும் விரிவடையத் தொடங்கின. இதன் விளைவாக உள்ளூர் அளவிலான விவசாயப் பொருளாதாரம் சிதறுண்டது, அவ்விடத்தில் அனைத்து தேசிய இனங்களின் பொருளாதாரங்களையும் ஒன்றிணைத்து வர்த்தகமும் வியாபாரமும் வளர்ந்தது, முதல்முறையாக தேசியச் சந்தையையும் தேசிய முதலாளித்துவப் பொருளாதாரத்தையும் ஈன்றது.

நவீன ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்துகளின் விரிவாக்கமும், பல்வேறு தேசிய இனங்களிடையே வர்த்தக வியாபாரப் பரிமாற்றமும், தேசியச்சந்தை உருவாக்கமும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் அனைவரிடமும் ஒன்றுபட்ட நலன் என்ற தேசிய உணர்வு வளர்வதற்கு உதவின. இந்த, பொருளாதார அரசியல் ஒற்றுமை உணர்வானது, இந்தியாவில் தேசிய அரசை உருவாக்கவேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தைத் தோற்றுவித்தது. இந்த நோக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக விடுதலைப் போராட்டத்தில் அனைத்து தேசிய இனங்களும் ஒன்று திரள்வதற்கு உதவியது. எனவேதான், மராத்தியர்கள், வங்காளிகள், ஒரியர்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் – என எந்த தேசிய இனமும் தங்களுக்கென்று தனி அரசை உருவாக்குவதற்குப் போராடவில்லை. தேசிய விழிப்புணர்வு இந்தியாவில் தனித்தனி தேசங்களாக உருவாக வேண்டும் என்பதாக வளரவில்லை. மத்தியப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் ஆட்சி இல்லாதிருந்திருந்தால் ஒருவேளை அப்படி ஆகியிருக்கலாம். அதேசமயம், பிரிட்டிஷ்–ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டத்தை மையப்படுத்தி அனைத்து தேசிய இனங்களிடைய உருவாகத் தொடங்கிய ஒற்றுமையின்மூலம்

தொடர்ச்சி **6**ம் பக்கம்

# அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் வெற்றிகரமான 3வது அகில இந்திய மாநாடு!

அகில இந்திய விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் சங்கமான ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) அதன் மூன்றாவது அகில இந்திய மாநாட்டை **2023** மார்ச் **11** முதல் **14** வரை கொல்கத்தாவில் மற்றும் மேற்குவங்க மாநில ஜாய் நகரில் நடத்த ஏற்பாடுகள் செய்திருந்தது.

முன்னதாக, மாநாட்டையொட்டி பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற பிரச்சாரப் பணிகளின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலும் பிரச்சாரப் பணிகள் **2023**, ஜனவரி மாதம் தொட்டே துவங்கப்பட்டன. ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் அச்சிடப்பட்டு ஏஐகேகேஎம்எஸ் செயல்பட்டு வரும் சேலம், தேனி, திண்டுக்கல், விழுப்புரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் மாநாட்டு முக்கியத்துவம் குறித்து விளக்கியுரைக்கப்பட்டது.




**விவசாயிகள், விவசாயிகள் இயக்கங்கள் மீது பன்னாட்டு நிறுவனங்களின் தாக்குதல்கள் குறித்த சர்வதேசக் கருத்தரங்கத்தில் எஸ்கேஎம் தலைவர்கள் உள்ளிட்ட சர்வதேசப் பிரதிநிதிகள் பங்கேற்பு**

வத்தலக்குண்டு வட்டாரப் பகுதியில் சுவரெழுத்துப் பிரச்சாரமும் செய்யப்பட்டது. இறுதிக்கட்டப் பிரச்சாரமாக சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு பல்வேறு மாவட்டங்களில் ஒட்டப்பட்டன.

தமிழ்நாடு சார்பில் ஏஐகேகேஎம்எஸ் செயல்பட்டுவரும் மாவட்டங்களைச் சேர்ந்த **10** பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மார்ச் **9** அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு **10**ம் தேதியன்று இரவே மேற்குவங்க மாநில ஹவுராவை சென்றடைந்தனர். மார்ச் **11** அன்று ஹெளரா மாவட்ட சரத் சதன் அரங்கில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் அவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். ஏஐகேகேஎம்எஸ்இன் அகில இந்திய

தொடர்ச்சி **2**ம் பக்கம்

# ஏஐகேகேஎம்எஸ்–ன் வெற்றிகரமான 3வது அகில இந்திய மாநாடு!

1ம் பக்கத் தொடர்ச்சி

தலைவர் தோழர் சத்தியவான் தலைமையில் சர்வதேசக் கருத்தரங்கம் நடைபெற்றது. சரத் சதன் அரங்கில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கில் நேபாள் மற்றும் பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர். அமெரிக்க பிரதிநிதி ஜோ மோர்மன் அவர்களின் விசா கடைசி நேரத்தில் மறுக்கப்பட்டதால் அவர் அந்தக் கருத்தரங்கில் பங்கேற்க முடியவில்லை. பாஜக அரசாங்கத்தின் இந்த மோசமான ஜனநாயக விரோதச் செயலை கருத்தரங்கம் வன்மையாகக் கண்டித்தது. அமெரிக்க பிரதிநிதி தோழர் ஜோ மோர்மன் அனுப்பி வைத்திருந்த உரை மாநாட்டில் வாசிக்கப்பட்டது. ஐக்கிய விவசாயிகள் முன்னணி அமைப்பின் (எஸ்கேஎம்) தலைவர் களான ஏஐகேஎஸ் (ஏ பி) அமைப்பைச் சேர்ந்த தோழர் ஆர் வெங்கையா, ஏஐகேஎம்எஸ் அமைப்பைச் சார்ந்த தோழர் பிரேம் சிங் கேலட் மற்றும் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் சங்கர் கோஷ் ஆகியோர் தங்களது கருத்துக்களை அக்கருத்தரங்கில் முன் வைத்தனர்.

கருத்தரங்கில் பேசிய யாவரும் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் மீது பன்னாட்டு நிறுவனங்கள் தொடுத்து வரும் தாக்குதல்களின் பல்வேறு அம்சங்களை விரிவாக விவாதித்தனர். உலகம் முழுவதிலும் விவசாயத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதலுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டத்தை கட்டமைத்து பலப்படுத்த வேண்டும் என்று ஒரு மனதாகப் பேசினர்.

அடுத்த நாள் 12.03.2023 அன்று பிரதிநிதிகள் அமர்வை முன்னடத்திச் செல்லும் ஆறு பேர்கள் கொண்ட பிரசிடியத்தை ஏஐகேகேஎம்எஸ் அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் சங்கர் கோஷ் முன்மொழிந்தார். அதில் அகில இந்திய உபதலைவருகளுள் ஒருவரான தோழர் ஆ ரெங்சாமியும் அடங்குவார்.

அடுத்தடுத்த நாட்களில் ஜாய் நகரில் நடைபெற்ற பிரதிநிதிகள் அமர்வில் 22 மாநிலங்களைச் சேர்ந்த 752 பிரதிநிதிகள் மற்றும் பார்வையாளர்கள் பங்கேற்றனர். மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியாக ஏஐகேகேஎம்எஸ் இன் அகில இந்தியத் தலைவர் தோழர் சத்தியவான் அவர்கள் செங்கொடி ஏற்றி தியாகிகள் ஸ்தூபிக்கு மலர் வளையம் சூட்டினார். அதன் பின்னர் தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அரசியல் ஆவண அறிக்கையின் பல்வேறு அம்சங்களை, அமைப்பு சட்டம் மற்றும் அகில இந்திய கோரிக்கைப் பட்டியலை விரிவாக விவாதித்து அந்த ஆவணங்களை செழுமைப் படுத்தினர். எவ்விதத் தயக்கமுமின்றி பிரதிநிதிகள் விவாதங்களில் பங்கேற்ற விதம் சரியான பாதையில் அடியெடுத்துச் சென்றுகொண்டி ருக்கும் விவசாயிகள் போராட்டத்தின் மீதான அவர்களின் உறுதிப்பாட்டை, ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியது.

இறுதியாக மார்ச் 14 அன்று நடைபெற்ற பிரதிநிதிகள் இறுதி அமர்வில் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பின் ஸ்தாபகரும் வழிகாட்டிமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் விட்டுச் சென்றிருக்கும் கடமைகளை வரும் நாட்களில் நிறைவேற்றும் வகையில் எங்ஙனம் ஏஐகேகேஎம்எஸ் அமைப்பை வளர்த்தெடுப்பது குறித்த எதிர்காலச் செயல் திட்டம் முன்வைக்கப்பட்டு விரிவாக விவாதிக்கப் பட்டது. ஏஐகேகேஎம்எஸ் அகில இந்தியத் தலைவராக தோழர் சத்தியவான் அவர்களும் பொதுச் செயலாளராக தோழர் சங்கர் கோஷ் அவர்களும் ஒருமனதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இம்மாநாடு 149 உறுப்பினர்களைக் கொண்ட அகில இந்திய கமிட்டி ஒன்றையும் தேர்வு செய்தது.

இறுதி அமர்வில், சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா ( கம்யூனிஸ்ட் ) கட்சியின் பொதுச் செயலாளரும் மாநாட்டின் சிறப்பு விருந்தினரு மான தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள், தற்போதைய தேசிய சர்வதேசிய சூழ்நிலைமை களின் பல்வேறு முக்கிய அம்சங்கள் மற்றும் வர்க்க உணர்வு பெற்ற ஒரு விவசாயிகள் சங்கம் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்து உத்வேக மூட்டும் ஓர் உரை நிகழ்த்தினார். பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் போதித்தவாறு உயர்ந்த கலாச்சார, அறநெறியொழுக்க அடிப்படையில் விவசாயிகள் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டுமென அவர் அறிவுறுத்தினார். விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்வை வளர்த்தெடுக்க வேண்டியது ஏஐகேகேஎம்எஸ்ன் கடமை என்பதையும் அதுவன்றி, புரட்சிகர இயக்கம் எதையும் வளர்த்தெடுக்க முடியாது என்பதையும் மிகவும் வலியுறுத்தினார்.

மேலும், மாபெரும் மார்க்சிய சிந்தனையாளர் களாக மார்க்ஸ். எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாசேதுங், சிப்தாஸ் கோஷ் யாவரும் கற்றுத் தந்தபடி, ஒவ்வொரு மாநாட்டுப் பிரதிநிதியும் வெகுஜனங்களுடன் சேர்ந்து வாழும் பழக்கத்தினை, அவர்களிடம் கற்றுக்கொள்ளும் பழக்கத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்.

இம்மாநாட்டில் தமிழ்நாடு சார்பில் தோழர் சந்திரபோஸ் அகில இந்திய செயற்குழுவிலும் தோழர் எஸ் சுருளியாண்டவரை அகில இந்தியக் கமிட்டியிலும் தோழர் அ கோவிந்தராசு மற்றும் தோழர் எஸ் ராதிகாவை அகில இந்திய கவுன்சிலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

“போராடுவோம், வெற்றிபெறுவோம்” எனும் உத்வேகத்துடன் மாநாடு முடிவுற்றது ■






இடது: மார்ச் 12–14 வரை நடைபெற்ற ஏஐகேகேஎம்எஸ் மாநாட்டுப் பிரதிநிதிகள் அமர்வில் தலைவர்கள்
வலது: மாநாட்டுப் பிரதிநிதிகள்

## மார்ச் 14, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் கார்ல் மார்க்ஸ் 140வது நினைவு தினம் சென்னை, விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் அனுசரிக்கப்பட்டது




தேனி

## மார்ச் 5, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் ஸ்டாலின் 69வது நினைவு தினம் விழுப்புரம், தேனி, மதுரை மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் அனுசரிக்கப்பட்டது




சேலம்

## மார்ச் 23 தியாகி பகத் சிங்கின் 92வது நினைவு தினம் விழுப்புரம், நெய்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் அனுசரிக்கப்பட்டது



சென்னை




தேனி

# தமிழக நிதிநிலை அறிக்கை 2023–24

# முதலாளிகளுக்கு கொண்டாட்டம் மக்களுக்கு ஏமாற்றம்

தமிழ்நாடு 2023–24 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதிஅமைச்சர் பழனிவேல்ராஜன் மார்ச் மாதம் 20ஆம் தேதி சட்டசபையில் தாக்கல் செய்தார். நிதிநிலை அறிக்கையில் வழக்கம்போல் 'திராவிட மாடல்', தமிழர் பண்பாடு போன்ற வார்த்தை ஜாலங்கள் ஏராளம். அதேசமயம் எல்லா அரசாங்கங்களையும் போலவே பற்றாக்குறையைக் குறைக்க நடவடிக்கைகள், ஜனரஞ்சகத் திட்டங்களுக்கு சற்று அதிக நிதி ஒதுக்கீடு, முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னேற்றம் என சுய பெருமைகளுக்கும் குறைவில்லை. 2 ஆண்டுகளுக்கு முன்பு தேர்தல் வாக்குறுதியில் கூறிய குடும்பப் பெண்களுக்கு மாதம் ரூ1000 செப்டம்பரிலிருந்து வழங்கப்படும் என்ற அறிவிப்பை அதையும், ஈரோடு இடைத் தேர்தலில் மீண்டும் அறிவித்து தற்போது பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியுள்ளனர்.

சுருக்கமாக, ஆண்டின் மொத்த வரி வருவாய் ரூ2,73,245. மொத்த செலவு, ரூ3,65,321 கோடி. இதில் பற்றாக்குறை 92,075 கோடி. இது போக வாங்கிய கடன் திருப்பிக் கொடுத்தது ரூ43,826 கோடி, மீண்டும் வாங்க இருப்பது 1,33,945 கோடி! சென்ற ஆண்டு செலவைவிட இவ்வாண்டு பட்ஜெட்டில் 12% உயர்ந்திருப்பதற்கு அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்வு, அவர்களுக்கு பென்ஷன் தொகை அதிகரித்திருப்பது காரணமாகக் கூறப்படுகிறது. கொரோனா ஆண்டுகளில் அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தினார்கள். எனவே பென்ஷன் தொகை அதிகரித்திருக்கின்றது. ஆயினும், இப்பணம் ஊழியர்களின் ஆயுட்காலச் சேமிப்பிலிருந்துதான் வழங்கப்படுகிறது, அரசின் பங்களிப்பு குறைவுதான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எப்படியிருப்பினும், எம்எல்ஏ, நகராட்சி, பஞ்சாயத்து உறுப்பினர்கள் உட்பட அரசு ஊழியர்கள் ஊதியம், கடனுக்கு வட்டி, பராமரிப்புச் செலவுகள் போன்ற வழக்கமான (Committed) வருடாந்தர செலவுகள் ரூ1,73,148 கோடியாகும். எஞ்சிய பணத்தைக் கல்வி, சுகாதாரம், கட்டுமானப் பணிகள், மானியம் போன்றவற்றிற்கு அரசாங்கம் ஒதுக்குகிறது.

வருவாய் இழப்பில் 30,000 கோடிகளை நிதி மேலாண்மை மூலம் குறைத்துவிட்டதாக நிதியமைச்சர் பெருமை பேசுகிறார். அதற்காக நிதிநிலை அறிக்கையின் துவக்கத்திலேயே "பல சீர்திருத்தங்களை" செய்ததாகக் கூறியிருக்கிறார். அந்த 'சீர்திருத்தங்கள்' மின்கட்டண உயர்வு, சொத்துவரியை 100% ஏற்றியது போன்றவையே.

இம்முறை நகராட்சி நிர்வாகம் மற்றும் மாநகர வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, சென்னையில் இரண்டாம்கட்ட மெட்ரோ திட்டத்திற்காகவும், கோவை மதுரை மாநகரங்களில் முதல் கட்ட மெட்ரோ திட்டங்களுக்கும் சுமார் ரூ27,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் மக்களின் கோரிக்கையல்ல. சாதாரண கட்டண பேருந்துகளை அதிகரித்து, சாலைப் போக்குவரத்தை மேம்படுத்துதல், துவக்கப்பட்ட பாலங்கள் கட்டும் பணிகளை விரைந்து முடித்தல் என பல கடமைகளை செய்து முடித்தாலே போக்குவரத்து நெரிசல் குறைந்துவிடும். இந்த மெட்ரோ திட்டங்களுக்கு, அவை முடியும் வரை வருடா வருடம் நிதி ஒதுக்கியாக வேண்டும். மேலும் இந்த மெட்ரோ பணிகளால்தான் போக்குவரத்து இடைஞ்சல்கள் பெருமளவில் ஏற்படுகின்றன. எல்லா மாநகரங்களுக்கும் மெட்ரோ திட்டம் என்பதற்கு நிச்சயமாக போக்குவரத்து நெரிசல் காரணமல்ல என்பதையும் பின் எதற்காக இதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதையும் ஆய்வு செய்தால்தான் வேறு உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும்.

### சுகாதாரம் மற்றும் கல்விக்கான ஒதுக்கீடு

அதேசமயம் அதி முக்கியத்துவம் வாய்ந்த சுகாதாரத்திற்கும் கல்விக்கும் பட்ஜெட்டில் மிகக் குறைவாகவே சென்ற ஆண்டைவிட நிதி ஒதுக்கீடு உயர்த்தப் பட்டிருக்கிறது. ஒட்டு மொத்த பட்ஜெட்டில் 13% கல்வித் துறைக்கும் 5% சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களை அடக்க காவல்துறை நவீனமயத்திற்கு 3%, ஊரக நகர்ப்புற, சாலை பாலங்கள் கட்டுமான, மெட்ரோ திட்ட செலவுகளுக்கு சேர்த்து 10% அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைக்கு சென்ற ஆண்டு ரூ17,902 கோடி, இவ்வாண்டு ரூ18,661 கோடி அதாவது வெறும் 4% மட்டுமே. விலைவாசி உயர்வை கணக்கில் எடுத்துக் கொண்டால் இது உண்மையில் சென்ற ஆண்டைவிடக் குறைவு. கல்விக்கும் இவ்வாண்டு ரூ40,299 கோடி சென்ற ஆண்டைவிட 9% உயர்த்தியிருந்தாலும், பணவீக்கத்தை கணக்கில் எடுத்தால் இது உண்மையில் 2% மட்டுமே உயர்வு ஆகும். அதையும் பெரும் பகுதி உயர்கல்வித் திட்டங்களுக்கு ஒதுக்கியிருக்கிறது நிதித்துறை. இதில்தான் 'நான் முதல்வன் திட்டம்' நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதற்கு ஏன் இவ்வளவு ஒதுக்கீடு? காரணம் தனியார் நிறுவனங்களில் மாணவர்களுக்கு திறனை மேம்படுத்த நிதி நேரடியாக வழங்குகிறார்கள். இத்திட்டத்தின் படி கல்லூரிகளில் இலக்கியம் அறிவியல் பொருளாதாரம் வணிகம் அடிப்படைப் படிப்புகளில் தேர்ச்சி வழங்குவதற்குப் பதிலாக தொழில்களுக்கான திறனை வளர்க்கப் போகிறோம் எனவும் அரசுப் பணித் தேர்வுகளுக்கு தயார்படுத்துகிறோம் எனவும் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் அடிப்படை அறிவுசார் பாடங்கள் குறைக்கப்படுகின்றன. இந்த மாணவன் எப்படி அடிப்படைப் பாடங்களில் தேர்ச்சி பெற்றவருடன் போட்டியிட முடியும்? தவிர, நாட்டில் தொழில் வளராததற்கும் வேலை கிடைக்காததற்கும் திறன் இல்லை என்பதா பிரச்சினை? கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிற நிதி பிரிவுகளும் இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம் என்ற பெயர்களில் பாஜகவின் அதே தேசிய கல்விக் கொள்கையை அமலாக்கத்தான் ஆகும்.

திறனை வளர்க்கும் ஐடிஐ, பாலிடெக்னிக் படித்தவர்களுக்கு வேலை கிடைத்து விட்டதா? இதன் நோக்கம், தொழிற்சாலைகளில் குறைந்த ஊதியத்தில் பணிபுரிய சிந்திக்க முடியாத மனித இயந்திரங்களை உருவாக்கும் முயற்சியே ஆகும். உற்று நோக்கினால் இதுபோன்ற திட்டங்கள் மத்திய பாஜக அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கையின் அமலாக்கம் தான் என்பது புலப்படும்.

ஆதித் திராவிடர் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் செயல்படும் பள்ளிகளுக்கான ஒதுக்கீடு ரூ4282 கோடியிலிருந்து 3513 ஆக மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இப் பள்ளிகளை பள்ளிக்கல்வித் துறையின் கீழ் கொண்டுவரும் திட்டம் இருக்கின்றது. அப்படியென்றால் அத்துறையை அமைத்ததன் நோக்கம் நிறைவேறிவிட்டது போலும்.

### பட்ஜெட்டில் ஜனரஞ்சகத் திட்டங்களுக்கு புகழாரம்

பட்ஜெட் உரையில் சொல்லப்பட்ட, தகுதி வாய்ந்த குடும்பத்தலைவிக்கு மாதம் ரூ1000, காலை உணவுத் திட்டத்திற்கு சுமார் ரூ500 கோடி உயர்வு, பத்திரப் பதிவுக் கட்டண விகிதம் 2% குறைப்பு போன்றவற்றை மிகப் பெருமையாக ஆளும் கட்சியினரும் அதன் கூட்டணிகளும் பேசிப் பெருமிதம் கொள்கின்றனர். இவை எதையும் மக்கள் தங்கள் கோரிக்கையாக வைத்துக் கோரவில்லை. குறிப்பாக பெண்களுக்கு உதவித்தொகை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் உழைக்கும் பெண்களான மருத்துவப் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் என பல்லாயிரக்கணக்கான பெண்கள் குறைந்த தொகுப்பூதியத்தில் பணியாற்றுகின்றனர். பணி நிரந்தரம் கோரி ஆண்டுக்கணக்கில் போராடு கின்றனர். பெண்கள் பணிபுரியும் பணியிடங்களை காலியாகும்போது நிரப்புவதில்லை. சமுதாயத்தில் பெண்கள மீது பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. காவல்துறையினரின் அத்துமீறல்கள் அதிகரிக்கின்றன. எனவே பெண்களின் உண்மையான உரிமைகளை மறுத்து 'உரிமை தொகை' என்ற பெயரில் இப்பணத்தை வழங்குகிறார்கள். அதேசமயம், டாஸ்மாக் வருமானத்தை அதிகரித்து இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள செய்தியும் வந்துள்ளது. மக்களை போதைக்கு அடிமையாக்கி பணம் பறிக்கும் திட்டத்தின் மூலம் இப்பணம் திரும்பி வந்துவிடும்! ஏற்கெனவே பெண்கள் தங்கள் வருமானத்தை கணவனிடம் பறிகொடுத்து குடும்பத்தைக் காப்பாற்ற தத்தளிக்கின்றனர். இந்த 1000 ரூபாயும் தன்னிடம் கொடுக்கச் சொல்லி அடித்து மிரட்டுவார்கள் என்ற அச்சத்தை பலர் தெரிவித்திருக்கின்றனர். இது குடும்பப் பிரச்சினை, பெண்கள்தான் சமாளிக்க வேண்டும் என எப்படி விடமுடியும்? வலது கையில் கொடுத்து இடது கையில் பிடுங்கிவிடுவார்கள் என்ற கருத்து பரவலாக உலவுகிறது. அதைவிடக் குறிப்பாக, இத்தகைய திட்டங்கள் எப்படி குடிமக்களின் வளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும்?

அதே போலத்தான் பத்திரப் பதிவுக் கட்டணக் குறைப்பும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட சொத்துக்களின் மார்கெட் மதிப்பு திருத்தப்படவில்லை. அதாவது உயர்த்தப் படவில்லை. மதிப்பை உயர்த்தி பின்னர் அதில் பத்திரப்பதிவுக் கட்டண சதவிகிதத்தை குறைத்தால் மொத்த வருவாய் குறையவா போகிறது? உண்மையில் மொத்த வரி வருவாயில் 14.1% பதிவுக் கட்டணங்களிலிருந்து வருகிறது. இதை உயர்த்த நிதி அமைச்சகம் திட்டமிட்டிருக்கிறது. விரைவில் மார்கெட் மதிப்பு உயர்த்தப்படும். மக்களும் பதிவு செய்ய மொத்தமாக இப்போதை விட அதிகமாகத்தான் பணம் கட்டியாக வேண்டும்.

அரசுப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவிற்கு மானியம் ரூ500 கோடியாக உயர்த்திருப்பதில் பெருமைபட என்ன இருக்கின்றது. 75 ஆண்டுகளாக சுதந்திர நாட்டில் பிறந்து வளர்ந்த மக்களின் அதிகரித்து வரும் வறுமைக்கு அங்கீகாரம் என்பதைத்தவிர இது வேறொன்றுமில்லை.

பாதாள சாக்கடை, கழிவுநீர் தொட்டியை மனிதர்களே சுத்தம் செய்தல் மானுடத்திற்கே களங்கம் என்று நீலிக்கண்ணீர் வடித்து விட்டு, தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக மாற்றப் போவதாக அறிவித்துள்ளார்கள். தூய்மைப் பணியாளர்கள் நவீன இயந்திரங்களை வாங்க மானியம் வழங்கப்படுமாம்! இது இப்பணிகளை முழுமையாக தனியார்மயமாக்கும் திட்டம் என்பதை புரிந்து கொள்ளுதல் எளிது. அதே சமயம் ஒவ்வொரு மாநகராட்சியிலும் கூலி உயர்வுக்காக தூய்மைப் பணியாளர்கள் போராடுவது இந்த அரசின் கண்களுக்குப் புலப்படவில்லை.

ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கி பழுது மற்றும் பராமரிப்பை தனியாரிடம் கொடுக்க உள்ளது. சென்னையில் மூன்று பேருந்து நிலையங்களை புதுப்பிக்கவும் சிலநூறு கோடிகள் ஒதுக்கப் பட்டுள்ளன.

வடசென்னை வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ 1000கோடி ஒதுக்கியுள்ளார்கள். இதற்கு முன்பும் அடையாறு, கூவம், கொசத்தலை ஆறுகளை தூய்மைப்படுத்த வரவுசெலவு திட்டத்தில் பல ஆயிரம் கோடிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் இது கானல் நீராகத்தான் இருந்துவருகிறது.

### அதிகரித்துவரும் உலகவங்கிக் கடன்

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கடைசியாக வருவாய் பற்றாக்குறை 92,074.91 கோடியாக இருக்கும் என்கிறார் நிதியமைச்சர். மொத்தக் கடன் நிலுவைத் தொகை 31.03.2024 இல் 7,26,028 கோடியாக இருக்குமாம். இது திராவிட மாடல் அரசு வருவதற்கு முன் 4.73 இலட்சம் கோடியாக இருந்தது. கிட்டத்தட்ட 2.53 கோடி அதிகமாக கடன் வாங்குகிறது. இவற்றிற்கு வட்டியே சுமார் 8%. ஒரு தனி நபருக்கு வட்டிக்கு ஃபைனாஸ் கொடுத்து வசூல்பன்ன

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தமிழக நிதிநிலை அறிக்கை . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

முடியால் நஷ்டமடைவதற்குப் பதிலாக ஒரு நாட்டுக்கே கடன் கொடுத்தால் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மக்களிடம் வரி வசூலித்து வட்டியை நிரந்தரமாக ஆண்டாண்டுக்கு கொடுத்து வருவார்கள் அல்லவா? அதே சமயம் அந்த நிதியும் அரசாங்கத்தின் திட்டங்களை அமுலாக்கும் தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு சென்றடைந்து விடுமல்லவா? ஒரே கல்லில் இரண்டு கனிகளை வீழ்த்தும் இந்த திட்டத்தை பல தசாப்தங்களாக உலக வங்கிகள் நடைமுறைப் படுத்திவருகின்றன.

### வேலைவாய்ப்பைப் பற்றி எதுவும் இல்லை

இளைஞர்களுக்கு திறன் இல்லாததால் தான் வேலைவாய்ப்பு இல்லை என்பது போல் காட்சிப் படுத்துகிறார்கள். இதைப்பற்றி ஏற்கெனவே கூறிவிட்டோம். எனினும், வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்து அரசாங்கத்தின் திட்டம் என்ன, இந்த பட்ஜெட்டில் அது குறித்த அம்சங்கள் இருக்கிறதா எனப்பார்த்தால் சுத்தமாக இல்லை. முதலீடுகளை ஈர்க்கிறோம் என பட்ஜெட் உரையின் போதும் சொல்லப்பட்டது. இம்முறையும் சுமார் நூற்றுக்குமேல் நிறுவனங்கள் முதலீடு செய்யும் வகையில் சிவகங்கை செங்கல்பட்டு ஈரோடு போன்ற சில இடங்களில் சில தொழிற் பேட்டைகளுக்கு நிதி அள்ளித் தரப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் கார்ப்பொரேட் நிறுவனங்களைத்தான் ஈர்க்கும் என்பது தெளிவு. கடந்த 1990களிலிருந்து முதலீடு ஈர்ப்புக் கொள்கை புதிய கார்ப்பொரேட்டுகளை நாட்டில் உருவாக்கி உலகப் பணக்காரர் பட்டியலிலும் இந்திய தனிநபர் பணக்காரர்களை உருவாக்கியிருக்கிறது இக்கொள்கை. ஆனால் எத்துணை வேலைவாய்புகளை கொடுத்து விட்டார்கள்? பூர்ஷ்வா பொருளாதார வல்லுனர்களே, இத்தகைய வளர்ச்சியை வேலை வாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி (Jobless growth) என ஒப்புக் கொள்கிறார்கள்.

### தொழிலாளர்களின் கோரிக்கைகள் முற்றிலுமாக விடப்பட்டன

தமிழக அரசில் உள்ள 6 லட்சம் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், முடக்கப்பட்ட அகவிலைப்படி நிலுவைத்தொகை, சரண்டர் வழங்க வேண்டும். சத்துணவு அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், எம்ஆர்பி செவிலியர்கள், ஊர்ப்புற நூலகர்கள், 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதிய பணியாளர்களை, சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களாக நிரந்தரப்படுத்தி, காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்க வேண்டும், பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் பணியை சத்துணவு ஊழியர்கள் மூலம் நடத்த வேண்டும், அரசு துறைகளில் நிரந்தர பணியிடங்களை ஒழித்துக் கட்டும் அரசாணை 115, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் நிரந்தர பணியிடங்களை அழித்திடும் அரசாணை 152 மற்றும் 139, ஆகியவற்றை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை அரசு ஊழியர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அவற்றில் எதையும் இந்த பட்ஜெட் அறிவிப்பு தொடவில்லை. மத்திய பாஜகவின் தொழிலாளர் விரோத புதிய தொழிலாளர் சட்டங்களை அமுலாக்க விரும்பும் திமுக மாநில அரசாங்கம் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை எப்படி ஏற்றுக் கொள்ளும்!

### பட்ஜெட்டால் முதலாளித்துவ வர்க்கம் குதூகலம்

கான்பெடரேஷன் ஆஃப் இந்தியன் இன்டஸ்ட்ரீஸ் என்ற குழுமம் இரண்டாண்டு களுக்கு முன்பு திமுக ஆட்சிக்கு வந்தபோது, கொரோனா பாதிப்பிலிருந்து முதலாளிகள் மீண்டெழ, அரசாங்கம் நிதித் திட்டம் வகுக்க வேண்டும் என்றது. அப்பொழுது வெள்ளை யறிக்கை வெளியிட்டு நிதிநிலையை சரிசெய்ய நோபல் பரிசு பெற்றவர்கள் உட்பட பொருளாதார நிபுணர்களைக் கொண்ட குழுவை அமைத்து மிகப் பெரிய நடவடிக்கையை எடுக்கப் போவதாக நிதியமைச்சர் விளம்பரப்படுத்திக் கொண்டார். கடந்த ஆண்டும் சரி, இப்போதைய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகும்சரி, இந்த குழுமம் மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறது. பட்ஜெட்டைப் பற்றி இக் குழுமத்தின் தமிழ்நாடு சேர்மன் சங்கர் வானவராயர் வானளாவப் புகழ்ந்து, “பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருக்கும் சென்னை, கோவை, ஓசூர் பகுதிகளில் தமிழ்நாடு தொழில்நுட்ப நகரத்திட்டம் உலகளாவிய நமது இருத்தலை காண்பிக்கும் அளவிற்கு எங்களை உயர்த்தும்” என்கிறார். மூன்றாம் படிநிலை நகரங்களான (tier III cities) செங்கல்பட்டு, திருநெல்வேலி, ஈரோடு ஆகிய ஊர்களில் நவீன டைடல் பார்க், சிப்காட் போன்றவை அமைப்பதை வரவேற்றிருக்கின்றர். அதேபோல், மெட்ரோ திட்டங்கள், ஸ்போர்ட்ஸ் நகரங்கள், திறன் மேம்பாட்டு திட்டங்களையும் (Business Economics, 20-3-23). ஆக இத்திட்டங்கள் யாருடைய கோரிக்கையினால் நிறைவேற்றப்படுகின்றன என்பது தெளிவு.

மொத்தத்தில் இந்த வரவு செலவு அறிக்கை வார்த்தை ஜாலங்களே உள்ள ஏமாற்று நிதிநிலை அறிக்கை. உண்மையான ஷரத்துகளை எந்த எதிர்க்கட்சியும் அம்பலப்படுத்தவில்லை. ஏனெனில் முதலாளித்துவக் கட்சிகளான அவையும் ஆட்சியில் இருந்துகொண்டு அதைத்தான் செய்கின்றன. அஇஅதிமுக வழக்கம்போல, கல்விக்கடனை தள்ளுபடி செய்யவில்லை, ரேஷனில் பருப்பு சேர்க்கப்பட வில்லை, கேஸ் சிலிண்டருக்கு மானியம் உயர்த்தப்பட வில்லை, பழைய பென்சன் திட்டம் கொண்டு வரவில்லை எனக்கூறி வெளிநடப்பு செய்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ, ரூ1000 திட்டம், மாணவர்களுக்கு சத்துணவு திட்டம், ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளை பள்ளிக் கல்வித்துறைக்கு மாற்றுவது ஆகியவற்றை வரவேற்கத்தக்கது என அடுத்த நொடியே பாராட்டி தனது விசுவாசத்தை காட்டிக் கொண்டது. இதே வரவேற்பை வழங்கி விசுவாசத்தை வெளிப்படுத்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிபிஐ (எம்), தன்னை சற்றே வேறுபடுத்திக் காட்டிக்கொள்ள, பழைய பென்ஷன் திட்டத்தை கொண்டுவர வேண்டும் 100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாளாக்க வேண்டும் என்ற தேர்தல் வாக்குறுதிகளை திமுக நிறைவேற்ற வேண்டும் என்று, பட்ஜெட்டில் உள்ள விஷயங்களை விமரிசனம் செய்யாமல் அறிக்கை வெளியிட்டது.

உண்மையில் மத்திய அரசின் திட்டங்களையே “திராவிட மாடல்” என்ற பெயரில் திமுக அமுலாக்கிக் கொண்டிருக்கிறது. ஏனெனில் அவை இந்திய ஏகபோக முதலாளிகளின் திட்டங்கள். அதில் தமிழ்நாட்டு ஏகபோகங்களும் அடக்கம். இவற்றுக்கு உகந்த வகையில்தான் பட்ஜெட்டும் வரையப்பட்டுள்ளது. இதற்கும் மக்கள் வாழ்க்கையில் சந்திக்கும் எரியும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் எந்த நேரடித் தொடர்பும் இல்லை. மாறாக தனியார்மய, தாராளமய, நவீனமயக் கொள்கைகளால், இருக்கும் வேலைகளும் பறிக்கப்பட்டு பெரும் எண்ணிக்கை யினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே தள்ளப்படுவர். மத்திய மாநில அரசாங்கங்களின் ஏகபோக முதலாளித்துவ ஆதரவுக் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் போக்கில் இந்தப் பட்ஜெட்டையும் அலசி அம்பலப்படுத்துவது இடதுசாரி ஜனநாயகச் சக்திகளின் கடமையாகும் ■

## சென்னை பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதை எதிர்த்து போராடும் மக்களுக்கு ஆதரவு



மார்ச் 2, 2023 அன்று சென்னை பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதை எதிர்த்து பாதிக்கப்படும் மக்கள் சார்பில் மேதா பட்கர் உள்ளிட்ட தலைவர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பு

## புதுச்சேரியில் கருத்தரங்கம்




மின்துறையை தனியார்மயப்படுத்தும் மின்சாரச் சட்டம் 2023 திருத்த மசோதாவை எதிர்த்து அகில இந்திய மின் நுகர்வோர் சங்கம் (AIECA) சார்பில் புதுச்சேரி தமிழ்ச்சங்க அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கம்

# தமிழக அரசாங்கத்தின் 2023–24க்கான வேளாண் பட்ஜெட் குறித்து ஏஐகேகேஎம்எஸ்

தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் 2023–2024 ஆம் ஆண்டுக்கான தனது வேளாண் நிதிநிலை அறிக்கையை சட்டசபையில் அறிவித்தது. அதில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வு காண சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்படும், கரும்பு விலை டன் ஒன்றுக்கு 2,950 ரூபாய் நிர்ணயிக்கப்படும், மரபு சார் நெல் ரகங்களை பாதுகாக்கவும் பெருக்கவும் நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்துக்கு ரூ75 லட்சம் ஒதுக்கீடு, அரசு விதை பண்ணைகளில் 200 ஏக்கரில் பாரம்பரிய நெல் விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க நடவடிக்கை, பயிர்க் காப்பீடு திட்டத்துக்கு மாநில அரசின் பங்களிப்பாக 2,339 கோடி ரூபாய் ஒதுக்கீடு, விளை பொருட்களை இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாக்க 60,000 விவசாயிகளுக்கு தார்பாய்கள் ரூ5 கோடி மானியத்தில் வழங்கப்படும், 50 உழவர் சந்தைகளை சீரமைக்க ரூ15 கோடி ஒதுக்கீடு, புதிதாக 10 உழவர் சந்தைகளை அமைக்க ரூ10 கோடி ஒதுக்கீடு, குறுவைப் பருவத்தில் மாற்றுப் பயிராக சிறு தானியங்கள், எண்ணெய்வித்துத் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க ரூ10 கோடி ஒதுக்கீடு, நெல் அறுவடைக்குப் பின் பயறு வகைகள் சாகுபடியை ஊக்கப்படுத்த ரூ5 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் போன்ற 40 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

மேலோட்டமாகப் பார்க்கையில் அவை யாவும் விவசாயம் சார்ந்ததாகக் காணப்பட்டாலும், அவை உண்மையில் விவசாயிகள் அன்றாடம் சந்தித்துவரும் பிரச்சினைகளை தீர்க்குமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு நம் நாட்டு விவசாயிகள், குறிப்பாக தமிழ்நாட்டு விவசாயிகள் அனுபவித்து வரும் துயரங்களின் ஒரு சிறு பகுதியையாவது இந்த பட்ஜெட் தொட்டுப் பார்த்திருக்கிறதா என்பதையும் சற்று ஆராய்வோம்.

உண்மையில், விவசாயிகள் எதிர்கொண்டு வரும் ஜீவாதாரப் பிரச்சினைகள் இவைதான். விவசாய இடுபொருட்களான விதை, உரம், பூச்சி மருந்து போன்றவற்றின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். அதே நேரத்தில் விளைவித்த விளைபொருட்களுக்கு நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. தொழிற்சாலையில் உற்பத்தி செய்த பொருட்களின் விலையை அத் தொழிற்சாலையின் முதலாளி விலை நிர்ணயம் செய்வதுபோல் அரும்பாடுபட்டு விளைவித்த வேளாண் விளை பொருட்களுக்கு ஓர் விவசாயியால் விலை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. வேறு வழியின்றி விளைபொருட்களை அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் உள்ளனர். இதன் விளைவாக, பெரும் கடன் சுமையால் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

ஒவ்வொரு பன்னிரண்டு நிமிடங்களுக்கும் ஒரு இந்திய விவசாயி தற்கொலை செய்து கொள்கிறார் என சில தரவுகள் கூறுகின்றன. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட நான்கு லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர்.

நம் நாட்டில் கிட்டத்தட்ட எழுபது சதவீத மக்கள் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள், அவர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமாக நிலமற்ற விவசாயிகள் உள்ளனர். நம் நாட்டில் எண்பத்தி நான்கு சதவீத நிலம் லாபகரமாக இல்லை. தேசிய விவசாயக் கமிஷன் அறிக்கையின்படி, 80 சதவீத விவசாய மக்கள், மாற்று வழிகளைக் கண்டால், தங்கள் விவசாயத்தைக் கைவிடத் தயாராக உள்ளனர். தினசரி மற்றும் மணிநேர விவசாயிகள், விவசாயி எனும் நிலையை இழந்து, தொடர்ந்து விவசாயத் தொழிலாளர்களாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.

விவசாயத் தொழிலாளர்களின் நிலை மிகவும் கொடுமையானது. அவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைப்பதில்லை, அதனால் தங்கள் மகன்கள் மற்றும் மகள்களுக்கு உணவளிக்க முடியவில்லை. புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக, வேலை தேடி அவர்கள் இங்கும் அங்கும் மாநிலம் மாநிலமாக புலம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். கடந்த கோவிட் காலத்தில் இந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பரிதாபமான நிலையை நாம் கண்கூடாகப் பார்த்தோம். இது விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் கொடூரமான ஒரு காட்சியாகும்.

தமிழ்நாட்டு விவசாயிகள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்துவரும் இன்னல்களைக் கீழ்க் கண்டவாறு பட்டியலிடலாம்.

1. தமிழ்நாட்டின் பிரதான வேளாண் விளைபொருளான நெல்லுக்கு கட்டுப்படியாகிற கொள்முதல் விலையை அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை. மேலும், நெல் கொள்முதல் செய்வதற்கான அரசாங்க நிதி போதிய அளவு உயர்த்தப்படவுமில்லை. அதனால் வேறு வழியின்றி விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

2. விளைவித்த நெல்லை விவசாயிகள் சிரமமின்றி விற்பதற்கு போதிய நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லை. போதிய கொள்முதல் நிலையங்களை அமைத்திட விவசாயிகள் அவ்வப்போது போராடிக் கொண்டுதான் இருக்கின்றனர். போதிய கொள்முதல் நிலையங்கள் அமைப்பது குறித்து தெளிவான அறிவிப்பு இந்த வேளாண் பட்ஜெட்டில் ஏதுமில்லை.

3. ஏற்கெனவே இயங்கிவரும் கொள்முதல் நிலையங்கள் பற்றாக்குறையால், உரிய பராமரிப்பு இல்லாததால் நெல், பருத்தி போன்ற வேளாண் பயிர்கள் கொள்முதல் நிலையங்களில் வாங்கப்படாமல் தேங்கிக் கிடந்து மழையால் சேதமடைந்ததை ஆண்டாண்டுகளாகப் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றோம். இது குறித்து தெளிவான அறிவிப்பு இந்த வேளாண் பட்ஜெட்டில் ஏதுமில்லை. மானிய விலையில் தார்பாய்கள் வாங்கப் போகிறோம் என்பது வெறும் கண்துடைப்பேயாகும்.

4. அரசு கொள்முதல் அமைப்பில் நிலவிக் கொண்டிருக்கும் ஊழலால் விவசாயிகள் அனுபவித்துவரும் இன்னல்கள் சொல்லி லடங்காது. விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதில் பாரபட்சம், கமிஷன் தொகை என ஊழல் அங்கே மலிந்து கிடக்கின்றது. அதைக் களைவது குறித்து தெளிவான அறிவிப்பு இந்த வேளாண் பட்ஜெட்டில் ஏதுமில்லை.

5. தமிழ்நாட்டில் மானாவாரி பயிர் விவசாயத்தை நம்பி பல்லாயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் உள்ளன. மழை பொய்த்துவிட்டால், அல்லது கடும் மழை பெய்து விவசாயத்தை நாசம் செய்துவிட்டால், கால்நடைகளை இழந்துவிட்டால், பெரும் சூறைக்காற்றால் வாழை மரங்கள் சாய்ந்து விட்டால் அவர்கள் பாடு திண்டாட்டம்தான். அவர்கள் சற்று நிவாரணமாக எதிர்பார்த்துக் கிடப்பது பயிர்க் காப்பீட்டுத் தொகையும் அரசு தரப்பில் தரப்படும் வறட்சி நிவாரணமும்தான். ஆனால் அதுவும் உரிய நேரத்தில் இழப்பீட்டுக்கு ஏற்ப கிடைப்பதில்லை. பலருக்கு கிடைக்காமலும் போய்விடுகிறது. அரசாங்கத்திடம் கோரிக்கைகளை வைத்து அதற்காகப் போராடும் நிலைக்குத்தான் அவர்கள் மேலும் மேலும் தள்ளப்பட்டுக் கொண்ருக்கிறார்கள்.

6. விவசாயிகள் பெரும்பாலும் கூட்டுறவு வங்கிகளிலோ, வட்டிக்கு கடைகளிலோ நகைக்கடன் வாங்கித்தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. விவசாயம் பொய்த்துவிட்டால் வட்டி கட்ட முடியாமல், கடனை திரும்பி அடைக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். கடனிலிருந்து விடுதலை பெறுவதற்கான எதுவும் இந்த அறிவிப்புகளில் காணப்படவில்லை.

7. தமிழ்நாட்டு கரும்பு சாகுபடி விவசாயிகள் மெட்ரிக் டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ4000/ நிர்ணயிக்க வேண்டுமென நீண்ட காலமாகவே போராடி வருகின்றனர். இந்த நிலையில் இந்த வேளாண் பட்ஜெட் அறிவித்திருக்கும் ரூ2950/ மெட்ரிக் டன் என்பது விவசாயிகளுக்கு எவ்விதத்திலும் லாபம் தராது. மேலும் கரும்பு ஆலைகளிலிருந்து கரும்பு உற்பத்தியாளர்களுக்கு வரவேண்டிய நிலுவைத்தொகை குறித்த அறிவிப்பு ஏதும் இதில் இல்லை.

8. மானிய விலையில் பாரம்பரிய நெல் ரகங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது. பெரும்பாலான விவசாயிகளுக்கு ஏற்கெனவே மானிய விலையில் கூட்டுறவு சொசைட்டிகளிலிருந்து நெல் விதைகள் கிடைப்பதில்லை என்றும் அது ஒரு சில பணக்கார விவசாயிகளுக்கே கிடைத்து வருகிறது என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் மேற்கண்ட அறிவிப்பு வெறும் கண் துடைப்பே என சாமானிய விவசாயிகள் கருதுகிறார்கள்.

9. மானாவாரி விவசாயத்தை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கும் சிவகங்கை புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் போராட்டத்தின் போக்கில் போடப்பட்ட வைகை குண்டாறு வாய்க்கால் திட்டம் நடைமுறைப்படுத்தத் துவங்கிய நிலையில் அது இன்னும் கிடப்பில்தான் உள்ளது. இது குறித்து தெளிவான அறிவிப்பு இந்த வேளாண் பட்ஜெட்டில் ஏதுமில்லை.

10. வத்தலக்குண்டு பெரியகுளம் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் அருகாமை சிற்றணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரை கிளை வாய்க்கால்கள் மூலம் அருகாமை கண்மாய்களுக்குத் திருப்பிவிடும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என சம்மந்தப்பட்ட அமைச்சர் உறுதியளித்திருந்தும் அதுவும் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தபாடில்லை. இது குறித்து தெளிவான அறிவிப்பு இந்த வேளாண் பட்ஜெட்டில் ஏதுமில்லை.

ஆக, விவசாயிகளின் இப்பிரச்சினைகளை கொஞ்சமாவது தீர்க்கும் வகையில் தமிழக அரசாங்கத்தின் வேளாண் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கின்றதா எனப் பார்த்தால் நமக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. அவை யாவும் விவசாயிகள் சந்தித்துவரும் பிரச்சினைகளை எவ்வகையிலும் தீர்ப்பதாகத் தென்படவில்லை.

சுருக்கமாகக் கூறினால், மத்திய அரசாங்கத்தின் வேளாண் பட்ஜெட் போன்றே தமிழக அரசாங்கத்தின் வேளாண் பட்ஜெட்டும் சிறு, குறு, நடுத்தர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் படும் அவலங்களின் ஒரு சிறு பகுதியையாவது தீர்த்துவைப்பதாகத் தெரிய வில்லை. மேலே சொல்லப்பட்டிருக்கும், தமிழக விவசாயிகளின் ஆண்டாண்டுகளாக அனுபவித்து வரும் பிரச்சினைகளை கொஞ்சமேனும் தீர்க்கும் வகையில் மாநில அரசாங்கத்தின் இந்த 40 அறிவிப்புகள் அமைந்துள்ளதா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையில் தமிழ்நாட்டு விவசாயிகளின் பிரச்சினைகளின் நுனியைக்கூட இத்தகைய அறிவிப்புகள் தொடவில்லை என்றே அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கமான ஏஐகேகேஎம்எஸ் (AIKKMS) கருதுகிறது.

இந்நிலையில், விவசாயிகள் தங்களை மேலும் அணிதிரட்டிக்கொண்டு மத்திய, மாநில அரசாங்கங்களை நிர்ப்பந்திக்க போராட்டப் பாதையை தேர்ந்தெடுப்பதைத் தவிர அவர்களுக்கு மாற்றுவழி ஏதுமில்லை. "போராடும் வெற்றிபெறுவோம்" எனும் முழக்கத்துடன் தமிழக விவசாயிகளை மற்றும் விவசாயத் தொழிலாளர்களை ஓரணியில் ஒன்றிணைக்க ஏஐகேகேஎம்எஸ் உறுதி பூண்டுள்ளது ■

# இந்திய மறுமலர்ச்சியின் சமூக அரசியல் பின்னணியும் அதன் இரண்டு போக்குகளும்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

*நவீன தேசத்தை உருவாக்கப் போராடினாலும், ஆரம்பத்திலிருந்தே அப்போராட்டத்தில் சில பலவீனங்கள் நிலவின. பிரிட்டிஷ்–ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதந்திரப் போராட்டம் எனற அரசியல் திட்டத்தோடு சேர்த்து சமூக–கலாச்சாரப் புரட்சி திட்டத்தை ஒருங்கிணைக்கும் பணிகளில் ஏற்பட்ட தோல்வியால் ஒட்டுமொத்த தேசியப் போராட்டமும் சில பலவீனங்களால் பாதிக்கப்பட்டிருந்தது. மதவாத சிந்தனைகளின் தாக்கத்திலிருந்து தேசிய இயக்கத்தை முற்றிலுமாக நம்மால் விடுவிக்க முடியவில்லை. எனவேதான், சுதந்திரம் அடைந்த பின்பும், அரசியல்ரீதியாக இந்தியா ஒரு தேசமாக உருவானபோதும், நம்முடைய நாட்டு மக்கள் மொழியால், மதத்தால், கலாச்சாரத்தால், பழக்க வழக்கத்தால் பிளவுபட்டு தனித்தனி சமூகங்களாக உள்ளனர். எனவே, ஒரே சீரான ஜனநாயக வாழ்க்கைக் கோட்பாடு உருவாவதற்கு மாறாக, நமது தேச மனப்பான்மை உருவாக்கத்தில் 'தேசிய இன மனப்பான்மை' கலந்துவிட்டது.*

*இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமை இந்திய தேசிய பூர்ஷ்வாக்களின் கைகளில் இருந்ததே இதற்கு முக்கியக் காரணமாகும். உலக முதலாளித்துவம் அதன் அனைத்து முற்போக்குக் குணாம்சங்களையும் இழந்து முழுக்கமுழுக்க பிற்போக்காக அழுகிப்போய்விட்ட நேரத்தில்தான் இந்தியாவில் தேசிய முதலாளித்துவமும் தேசிய விடுதலைப் போராட்டமும் வளர்ந்தது. இந்திய தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்டிருந்தாலும் அது உலக முதலாளித் துவத்தின் ஒரு பங்கும் பகுதியுமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. முதலாளித்துவம் தனது ஆரம்பக்காலகட்டமான 17–18ஆம் நூற்றாண்டு களில் மத இன வேறுபாடுகளைக் கடந்து சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோஷங் களுடன் பல முற்போக்கு ஜனநாயக அம்சங்களைக் கொண்டிருந்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதலாளித்துவம் ஏகபோக மூலதனத்தை உருவாக்கி, ஏகாதிபத்தியமாக முதிர்ந்துவிட்ட பிறகு ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் காலனி அடக்குமுறையையும் கொண்டுவந்தது. எனவே உலக ஏகாதிபத்தியம் முதுமையடைந்து அழுகிப்போன காலத்தில் இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த தேசிய முதலாளித்துவத் தலைமை யிடம் முதலாளித்துவத்தின் துவக்கக்காலத்தில் இருந்த புரட்சிகரக் குணாம்சத்தை நம்மால் காண முடியவில்லை. ஏகாதிபத்திய–எதிர்ப்பு சுதந்திரப் போராட்டத்திற்கு இந்திய தேசிய பூர்ஷ்வா வர்க்கம் தலைமை தாங்கியபோதும், சர்வதேச பிற்போக்கு முதலாளித்துவத்தின் பங்கும் பகுதியுமாக அது இருந்ததால், புரட்சிகரக் குணாம்சத்தை அது கொண்டிருக்கவில்லை. மாறாக ஏகாதிபத்தியத்திற்கு ஒரு சீர்திருத்தவாத எதிர்ப்பை மட்டுமே காட்டியது. எனவேதான் நமது விடுதலைப் போராட்ட காலகட்டத்தில் பூர்ஷ்வா மனிதத்துவவாதிகளிடையே கீழ்க்கண்ட இரண்டு எதிரெதிர் சிந்தனைப் போக்குகளையும் (Trends) கண்ணோட்டங்களையும் நாம் காண்கிறோம். ஒரு போக்கு ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத் துவத்துடன் சமரசம் செய்துகொண்டது. இந்தப் போக்குதான் நமது விடுதலைப் போராட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தியது. மற்றொன்று சமரசமற்ற போக்கு, ஏகாதிபத்தியத்தோடும் நிலப்பிரபுத்துவத்தோடும் சமரசம் செய்து கொள்ளாத போக்கு என இருந்தது.*

*...கலாச்சார இயக்கத்தில் மட்டுமின்றி அரசியல் இயக்கத்திலும் ஜனநாயகக் கோட்பாடுகளுடன் மத, சமூக முன்னபிப்பிராயங்களை இணைக்கும் ஒரு விநோதமான சமரசத்தை நாம் செய்து விட்டோம். நாம் மதத்திற்கு எதிராகப் போராட வில்லை. தேசம் மற்றும் தேசியவாதம் பற்றிய புதிய சிந்தனைகளையும் கருத்துகளையும் நாம் முன்னணிக்குக் கொண்டுவரவில்லை, அவற்றை மதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவும் இல்லை. இதன் விளைவாக நமது தேசியவாதம் ஒரு மதச்சார்பு தேசியவாதமாகப் போய்விட்டது. அன்றைய இந்திய சூழலில் அது இயற்கையாகவே இந்துமதச் சார்பு தேசியவாதமாகிவிட்டது. நமது நாட்டின் விடுதலைப் போராட்டத் தலைவர்கள் ஜனநாயகக் கருத்துகளைப் பற்றி என்னதான் அற்புதமாகப் பேசியிருந்தாலும் அது முஸ்லீம் சமுதாயத்தின் மனதைத் தொடவே இல்லை. ...ஒட்டுமொத்த முஸ்லீம் சமுதாயத்தையும் சுண்டி இழுப்பதில் நாம் தோற்றுவிட்டோம். அவர்களது அச்சத்தைப் போக்குவதில் நாம் தோற்றுவிட்டோம். ஏன்? இது மட்டும்தானா? இந்து சமுதாயத்திற்குள் தீமையாக உள்ள சாதியவாதத்தையும் தகர்த்தெறிய முடியவில்லையே! தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இத்தகைய மாபெரும் தேசிய எழுச்சி அரசியல் களத்தில் நடைபெற்ற அதே வேகத்தில் சமூகப் புரட்சிப் (Social revolution) பணிகளை நாம் செய்யவில்லை. எனவேதான் தாழ்த்தப்பட்ட சாதி கூட்டமைப்பு (ஷெட்யூல்ட் காஸ்ட் ஃபெடரேஷன் 1942) உருவானது. தேசிய இயக்கத்தின் தலைமை பிரதானமாக பிராமணர்கள், காயாஸ்தர்கள் அல்லது சாதி இந்துக்களின் கைகளிலேயே இருந்தது. பொதுக்கூட்டங்களிலும் போராட்டங்களிலும் 'தோழர்களாக' காட்டிக் கொண்ட தலைவர்கள் தமது வீடுகளுக்குள் தாழ்த்தப்பட்டவர்களையோ அல்லது முஸ்லீம் களையோ அனுமதிக்கவில்லை. நீ தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து வருகிறாய் நான் பிராமண குடும்பம் என்றே இருந்துவிட்டார்கள். நான் உனக்காக எனது உயிரையும் தருவேன், நாம் எல்லோரும் தோழர்கள், விடுதலைப் போராட்டத்தில் நாம் எல்லோரும் போராளிகள், ஜனநாயக இந்தியாவிற்காக நாம் போராடுகிறோம், ஒரே மேடையில் பேசுவதற்கு எந்தத் தடையும் இல்லை, ஒருவருக்காக மற்றொருவர் உயிரை விடவும் நாம் தயங்கமாட்டோம், ஆனால், எனது மகளோடு காதல் கொள்ள உனக்கு எந்த உரிமையும் இல்லை. உனக்கு எனது மகளைத் திருமணம் செய்துவைப்பது சாத்தியமே இல்லை! அவள் அவளது சொந்த சாதிக்குள்தான் திருமணம் செய்யவேண்டும்! தனிப்பட்ட நடத்தையில், வெகுசில தலைவர்கள்தான் இதற்கு விதிவிலக்காக இருந்தனர். ... ஆனால் அது போதுமானதாக இருந்ததா? ...தேசிய மனப்பான்மையில் எழுந்த சிக்கலான முடிச்சுகளை அவிழ்ப்பதற்குப் போதுமான சித்தாந்த இயக்கத்தை தேசிய விடுதலை இயக்கத்தின் வேர்மட்டத்தில் நடத்த முடியவில்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதைச் செய்வதற்கு, இந்த சாதி மத இன வேறுபாடு களைக் கொண்ட குறுகிய மனப்பான்மையை, நிலப்பிரபுத்துவ கண்ணோட்டத்தை, ஒற்றுமை யின்மையை விட்டொழிப்பதற்கு, நாட்டின் அரசியல் புரட்சித் திட்டத்தோடு சேர்த்து சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சியையும் நடத்துவது மிக முக்கியமான கடமையாகும். ஆனால் ஒட்டுமொத்த இயக்கத்தின் தலைமையும் சீர்திருத்தவாதத் தேசிய முதலாளிகளின் கைகளில் இருந்ததால் இக்கடமையை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை.*

*எனவே ராஜாராம் மோகன்ராய் முன்னெடுத்த, வித்யாசாகர் மேலும் வளர்த்த, சரத் சந்திரர், நஸ்ரூல் ஆகியோர் உயர்த்திப்பிடித்த சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சிப் பதாகையை நமது அரசியல் இயக்கக் காலத்தில் கண்டுகொள்ளாமல் தூக்கி எறிந்துவிட்டோம். நாம் அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசியல் இயக்கத்தில் மட்டுமே உள்ளோம் என்று கூறிக்கொண்டு சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சி எனும் இந்தப் பதாகையை ஒதுக்கித் தள்ளி விட்டோம். நமது நாட்டின் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் இயக்கத்தின் இந்த பலவீனத்தின் பிரதிபலிப்பைத்தான் நாம் காந்திஜி மற்றும் ரவீந்திரநாத் தாகூரிடம் காண்கிறோம், இதற்கு அவர்கள் தனிப்பட்ட முறையில் தைரியமில்லாமலோ அல்லது திறமையில்லாமலோ இருந்தனர் என்று கூறமுடியாது. அப்படிக்கூறினால் பிரச்சினையின் வீரியத்தை குறைத்து மதிப்பிடுவதாகிவிடும். ஏனெனில், அவர்கள் இருவரும் மிகவும் திறமையானவர்கள் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஆனால் தெரிந்தோ தெரியாமலோ, அவர்கள் வெளிப்படுத்திய வர்க்கச் சிந்தனை, இந்திய தேசிய பூர்ஷ்வா வர்க்க சிந்தனையாக இருந்தது, அது பிற்போக்குத்தனமாகவும், சீரழிந்தும், சமூக வளர்ச்சிக்கு எதிராகவும் இருந்தது. அவர்களுடைய பலவீனத்திற்கான காரணம் இந்திய தேசிய முதலாளித்துவ வர்க்கச் சிந்தனை என்பதில்தான் பொதிந்துள்ளது. சர்வதேச களத்தில் முதலாளித்துவ உலகக் கண்ணோட்டம் பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டம் ஆகிய இரண்டு உலக கண்ணோட்டங்களுக்கிடையிலான முரண் பாட்டின் தாக்கத்திலிருந்து நமது விடுதலைப் போராட்டம் முற்றிலும் விடுபடவில்லை. சீரழிந்து போன பூர்ஷ்வா மனிதத்துவ சித்தாந்தத்தின் தாக்கத் திலிருந்தும் சர்வதேச களத்தில் முதலாளி–பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் அடைப் படையிலான முரண்பாடுகளின் செல்வாக்கி லிருந்தும் இந்திய தேசிய பூர்ஷ்வாக்களால் விடுபட்டு இருப்பது வரலாற்றுரீதியாக சாத்தியமில்லை.*

ஜனநாயகப் புரட்சி அல்லது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி, அல்லது தேசிய ஜனநாயகப் புரட்சி என்று பல்வேறு மார்க்சிய வார்த்தை களில் அழைக்கக்கூடிய ஒரே புரட்சியான, முதலாளித்துவப் புரட்சி சகாப்தத்தின்போது அந்தப் புரட்சிக்கு ஏதுவாக பூர்ஷ்வா மனிதத்துவக் கருத்து பிறந்தது. எனவேதான் அந்த (18ஆம் நூற்றாண்டின்) ஆரம்ப காலத்தின் மனிதத்துவ சிந்தனைகளும் கருத்துகளும் புரட்சிகரமானவையாக இருந்தன. நிலப்பிரபுத்துவ மன்னராட்சி அதிகாரத்தைத் தூக்கியெறிந்து பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது. அப்புரட்சி, தனிச்சொத்துரிமையின் அடிப் படையில் உற்பத்தி சாதனங்கள் மற்றும் உற்பத்தி உறவுகளில் புரட்சிகர மாற்றங்களை கொண்டு வந்தது. அது ஒருவகையில், தனிநபர் விடுதலை, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரட்சியாக இருந்தது. எனவே சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம், என்ற பூர்ஷ்வா கோஷங்களின் அடிப்படையில் இந்த முதலாளித்துவப் புரட்சியானது அனைத்துவிதமான மதவெறி மற்றும் சமூக முன்னபிப்பிராயங்களை எதிர்த்து ஓய்வின்றிப் போராடியது, தேவாலயத்தின் ஆதிக்கத்தை ஒழித்தது, பண்ணை அடிமைகளை விடுவித்தது, தனிநபர் சுதந்திரத்தைக் கொண்டு வந்தது. அதோடு பெண்ணினத்தை விடுதலை செய்தது. இயற்கையாகவே, முதலாளித்துவ சித்தாந்தமாக இருந்தபோதிலும், மனிதத்துவம் அன்று புரட்சிகரமானதாக இருந்தது. தேசிய அரசையும் ஜனநாயக அமைப்பையும் நாட்டில் உருவாக்கியதன் மூலம் தனிநபர் சுதந்திரத்தையும் பெண்கள் விடுதலையையும் உத்திரவாதப் படுத்தியது. முன்னெப்போதும் இல்லாதவகையில் தொழில்நுட்ப வளர்ச்சியையும், விவசாயம் போன்ற தொழில்களை நவீனமயப்படுத்தி சமூக–பொருளாதார வாழ்க்கையில் புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவந்தது.

ஆனால் ஜனநாயகம் என்ற பெயரில் உற்பத்தி ஆலைகள் போன்ற சாதனங்கள் மீது தனியுடைமையின் அடிப்படையிலான சமூக அமைப்பாக இருந்ததால் முதலாளித்துவம் சில படிகள் மட்டுமே முன்னேற முடிந்தது. பின்பு, நிலப்பிரபுத்துவத்தின் பிடியிலிருந்து ஒரு காலத்தில், தான் விடுவித்தவர்களின் (மக்களின்) வாங்கும் சக்தியை, முதலாளித்துவ சுரண்டலின் மூலமாக, கசக்கிப் பிழிந்தது. அதோடு படிப் படியாக ஏகபோக மூலதனத்தை உருவாக்கியது. விரைவிலேயே, முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு, சந்தை நெருக்கடியை உருவாக்கிக் கொண்டது.

ஏகபோக முதலாளித்துவத்தை ஈன்றெடுத்த அந்த கணம் முதலே அது சந்தை நெருக்கடியை உருவாக்கியதால் தனது சந்தையை விரிவாக்க வேண்டிய தேவை தோன்றியது. இதுதான் முதலாளித்துவத்தின் தவிர்க்கயியலா விதியாகும்.

முதலில், உருவாகி வளர்ந்த காலத்தில், மனிதத்துவம் மற்றும் ஜனநாயகம் என்ற கருத்தின் அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு தேசத்தின் விழிப்புணர்வை வளர்த்தது. ஒட்டுமொத்த தேசத்தின் வாழ்வாதாரத்தையும் நவீனமயப் படுத்துவதற்காக ஜனநாயகக் கோட்பாடுகளையும் தேசிய அரசையும் உருவாக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தது. ஆனால் முதலாளித் துவம் வேரூன்றியவுடன் ஏகபோக மூலதனத்தை ஈன்று தனக்குத் தானே நெருக்கடியை உருவாக்கிக்கொண்டது. இதைத் தொடர்ந்து அந்நியச் சந்தையை தேடிப்பிடித்து ஆக்கிரமித்தது. உலகளாவிய அளவில் பரந்து விரியும் (காஸ்மோபாலிடன்) குணாம்சம் பெற்று முதலாளித்துவம் ஏகாதியபத்திய கட்டத்தை அடைந்தது. உலக முதலாளித்துவம் ஏகாதி பத்தியக் கட்டத்தை அடைந்த அக்கணமே பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி அதன் புரட்சிகரக் குணாம்சத்தை இழந்து பிற்போக்குத்தனமாக மாறி சமூக முன்னேற்றத்திற்குத் தடையானது. அறிவியல்பூர்வ தொழில்நுட்ப வளர்ச்சியையும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் கட்டுப் படுத்தியதன் விளைவாக பொருளாதாரத்தில் தேக்க நிலையை உருவாக்கியது. இதன்பிறகு

தொடர்ச்சி 7ம் பக்கம்

# தேர்தலில் மக்களின் தீர்ப்பை மாற்றும் தொழில்நுட்ப முறைகேடுகள்

தேர்தலுக்கு முன்புவரை மக்களிடம் காணப்படும் பொதுவான மனநிலையை பல சமயங்களில் இப்போதெல்லாம் தேர்தல் முடிவுகள் பிரதிபலிப்பதில்லை என்ற கருத்து நிலவுகிறது. பொதுவாக ஆளும் கட்சிகள், விலைவாசி உயர்வு ஊழல் போன்ற மக்கள் விரோத அம்சங்களால் மதிப்பிழந்து தேர்தலில் பின்தங்கி அமைப்பிற் கெதிரான வாக்குகளாக மாறுவது வழக்கம். ஆனால் சமீபகாலமாக ஆளும் கட்சியே தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வருவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக 2019 தேர்தலில் மீண்டும் பாஜக மத்தியில் முன்பைவிட பெரும் பான்மையுடன் வந்தது. சென்ற குஜராத் மாநில தேர்தலிலும் பல்வேறு முறைகேடுகள் செய்தி ஊடகங்களில் வந்திருந்ததை எமது ஆங்கில பத்திரிகை புரோலிடேரியன் எரா (15.01.2023) சுட்டிக்காட்டியிருந்தது. அங்கு மீண்டும் ஆளும்கட்சியான பாஜக வந்துவிட்டது.

தேர்தல்கள் நேர்மையாகவும் நடுநிலையுடனும் நடக்கின்றதா என்ற கேள்வி எழுவதற்கு சமீபத்திய சில செய்திகள் ஆதாரமாக இருக்கின்றன. தற்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்கு எந்திரம் (EVM) தகவல் தொழில்நுட்பத்தில் (IT) இயங்குகின்றது. இந்த தொழில்நுட்பம் பல விந்தைகளைச் செய்யக் கூடிய வல்லமை பெற்றது. இதைப் பயன்படுத்தி வாக்கு எந்திரங்களை ஒருகட்சிக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு சாதகமாக வாக்குப் பதிவை செய்ய முடியும் என்ற முறைகேட்டை பல நிபுணர்கள் செய்து காட்டி நிரூபித்துள்ளனர். ஆனால் அரசாங்கமோ தேர்தல் கமிஷனோ எந்திர வாக்குப் பதிவுமுறையை கைவிடுவதாக இல்லை. காரணம் அவர்களுக்கே வெளிச்சம். ஆளும் கட்சியின் ஆளுமையில் இருப்பதால் தேர்தல் கமிஷன் இந்த முறைகேடுகள் நடக்க முடியும் என்பதை அங்கீகரிக்காமல் அவை எல்லாம் பொய் என ஒதுக்கி வருகிறது.

மேலும், சென்ற டிசம்பரில் தேர்தல் கமிஷன், புலம்பெயர் தொழிலாளர்களின் வசதிக்காக 'ரிமோட் ஓட்டிங் மெஷின் (RVM)' அமைப்பை ஏற்படுத்த முன்முயற்சி எடுத்திருப்பதாக அறிவித்தது. இதனை விவாதிக்க அங்கீகரிக்கப்பட்ட அகில இந்திய கட்சிகள் 8, மாநிலக் கட்சிகள் 57ஐ, ஜனவரி 16, 2023 அன்று அழைத்திருந்தது. அதேபோல், அதற்கு முன்பே, வெளிநாட்டுவாழ் இந்தியர்களும் (NRI) வாக்களிக்கும் விதத்தில் மின்னணுவகையில் பரிமாற்றம் செய்யப்படும் போஸ்டல் வாக்குப்பதிவு அமைப்பை (Electronically Transmitted Postal Ballot System) நிறுவ தொழில்நுட்பரீதியிலும் நிர்வாக ரீதியிலும் தயாராக இருப்பதாக சட்ட அமைச்சகத் திற்கு தேர்தல் கமிஷன் சொல்லியிருந்தது. அதனை அஸ்ஸாம், மேற்கு வங்கம், கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறியது. இதற்கான முயற்சியை தேர்தல் கமிஷன் 2014லிலேயே துவக்கிவிட்டது. அப்பொழுது வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் தாங்களும் வாக்களிக்க விரும்புவதாக வெளியுறவுத்துறை அமைச்சகத்திலிருந்து கோரிக்கை வந்திருந்தது. தபால் வாக்குமுறையை அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரைக்கப்பட்டு பல குழுக்களிடம் விவாதம் நடத்தினர். ஆனால் பல எதிர்க்கட்சிகள் மறுப்புத் தெரிவித்ததன் காரணமாக அது அமுலாக்கத்திற்கு வரவில்லை. அவர்கள் மறுத்ததன் காரணம் தெரிந்ததுதான். ஆளும் பாஜக இதை அமுலாக்கத் துடித்தது. அதற்கென மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950ஐ திருத்தி 2017ல் பாராளுமன்றத்தில் முன்வைத்தது. ஆனால் ராஜ்யசபாவில் அனுமதிக்காக காத்திருந்து இறுதியில் சட்டமாக வரவில்லை.

தற்போது பாஜக இதை மீண்டும் கொண்டுவர முயற்சிக்கிறது. அதேசமயம், பிரபலமான பிரிட்டிஷ் நாளிதல் தி கார்டியனில் பிப்ரவரி 15–16, 2023 தேதிகளில் வெளிவந்த அறிக்கைகள் அதிர்ச்சி அளிக்கின்றன. மூன்று பிரபல பத்திரிகை யாளர்களின் ஆய்வின் அடிப்படையில் அந்த அறிக்கைகளை அது வெளியிட்டது. அதில் 'டெமோமான் இன்டர்நேஷனல்' என்ற இஸ்ரேல் நாட்டு கம்பெனியைப் பற்றி எழுதியிருந்தது. அக்கம்பெனி இந்தியா உட்பட பல நாடுகளில் கடந்த 20 ஆண்டுகளாக தேர்தலில் ஒரு அதிநவீன மென்பொருளைப் பயன்படுத்தி முறைகேடுகள் செய்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மென்பொருள், டுவிட்டர், ஃபேஸ்புக், லிங்கடின், டெலெகிராம், இன்ஸ்டாகிராம், ஜிமெயில், யூ டியூப் போன்ற சமூக வலைதளங்களில் போலி சமூக ஊடக புரொஃபைல்களை (தனிநபர் கணக்குகள்) இலட்சக்கணக்கில் உருவாக்கி உலாவிட்டிருக்கிறதாம். மேலும், அமேசான் கணக்கு களையும், கிரெடிட் கார்டுகளையும் பிட்காயின் பர்ஸுகளையும் உருவாக்கி வைத்திருக்கிறதாம்.

இந்த கம்பெனியை, முன்னாள் இஸ்ரேலி சிறப்புப் படைக்காக வேலைசெய்த ஹனன் என்ற நிறுவனம் செயல்படுத்தியிருக்கிறது. தற்போது இது வேறு பெயரில், பிற வலைதளங்களையும் சமூக ஊடகங்களையும் களவாடி (Hack) தில்லு முல்லுகள் செய்து மக்கள் கருத்தை தனக்கேற்றார் போல் மாற்றுகிறது. உலகம் முழுவதும் மிக முக்கிய தேர்தல்களில் கருத்து மாற்றம் மற்றும் முறைகேடு களைச் செய்வதில் ஒரு டஜன் நாடுகளிலும், 30 நாடுகளின் தேர்தல்களில் தில்லுமுல்லு செய்தும் இருப்பதாக அந்த அறிக்கை வெளிப்படுத்தி யுள்ளது. தனது திருடும் பணிசெய்யும் (மால்வேர்) மென்பொருளான தி எய்ம்ஸ் (The Aims) என்பதை சில பெயர் தெரியா உளவு நிறுவனங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கார்ப்பொரேட் கம்பெனி களுக்கும் ஹனன் நிறுவனம் விற்றுள்ளதை அறிக்கை அம்பலப்படுத்துகிறது. இந்த மென்பொருள், சமூக ஊடகங்களிலிருந்து சிலரது முக படங்களை எடுத்து, அதற்குப் பொருத்தமான நாடு, ஆண்பாலா பெண்பாலா போன்றவற்றை சேர்த்து அந்த போலி நபரை உண்மையானவர் போல் தரவுகள் அடங்கிய தனிநபர் விவரங்களை உருவாக்கி அவர் உண்மையில் சமூக ஊடகத்தில் இருப்பவர்போன்று பதிவை உருவாக்குகிறது. இதன்மூலம் பொய்யான சமூக ஊடக விலாசங்களை ஏற்படுத்தி, ஐக்கிய நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பனாமா, கிரீஸ், சுவிஸ், மெக்சிகோ, மொரோகோ, ஐக்கிய அரபு நாடுகள், ஜிம்பாவே, பெலாருஸ், இக்வேடார் மற்றும் இந்தியா ஆகியவை உட்பட்ட 20 நாடுகளில் ஊடகப் பிரச்சாரத்தை நடத்தியிருக்கிறது. இதன்மூலம் மக்கள் கருத்தை செயற்கையாக வடிவமைத்திருக்கிறது இந் நிறுவனம்.

அதேபோன்று உலகில் 30 தேர்தல்களில் எதிர் தரப்பினரின் தேர்தல் பிரச்சாரத்தில் இம் மென்பொருள் குழப்பத்தை உருவாக்கி, பொய் பிரச்சாரத்தை நடத்தி, அவர்களைக் கவிழ்க்கும் வகையில் சமூக ஊடகங்களில் ஆட்டோமேட்டிக் பொய் பிரச்சாரத்தை இந்த தி எய்ம்ஸ் சாஃப்வேர் நடத்தியிருக்கிறது. கென்யாவிலும் நைஜீரியாவிலும் அதிபர் தேர்தலில் முறைகேடு செய்ய இந்த மென்பொருள் பயன்பட்டிருக்கிறது.

2014லிலும் 2019திலும் நடந்த இந்திய பாராளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள் நடக்க இந்த மென்பொருள் பயன்படுத்தியிருக்கலாம் என்பதை யூகிக்க முடிகிறது. உறுதியான ஆதாரம் இல்லை. ஏனெனில் இந்த நிறுவனத்தின் பயனாளிகள் பட்டியலில் இந்தியாவின் பெயரும் உள்ளது. இதை மேலும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். இதைப்போலவே குடிமக்களின் கைப்பேசிகளை வேவுபார்க்க இந்திய அரசாங்கம் பிகாசஸ் (Pegasus) என்ற மென்பொருளை பயன் படுத்துகிறது என மொபைல் ஆபரேடிங் நிறுவனங்கள் கூறுகின்றன; ஆனால் அரசாங்கம் இதை ஒப்புக்கொள்ளவில்லை.

ஆக, துவக்கத்தில் கூறியதைப் போல, தேர்தல் முடிவுகளில் வியக்கத்தக்கவகையில் மீண்டும் ஆளும் கட்சியே அதிக பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுவருவதைப் பார்க்கும் போது, இந்த சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடிய வில்லை. மின்னணு வாக்கு இயந்திரத்தைக் கண்டுபிடித்த நாடுகளே அவற்றைப் பயன்படுத்து வதில்லை. உலகம் முழுவதும் காகித வாக்குச் சீட்டுகள்தான் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. நமது நாட்டிலும் பல அரசியல் கட்சிகள் வாக்குச் சீட்டுக்கு மாறச் சொல்லி கோருகின்றன. ஆனால் பாஜக அரசாங்கமும் தேர்தல் கமிஷனும் மின்னணு வாக்கு எந்திரத்தைத்தான் பயன்படுத்துவோம் என முரண்டுபிடிக்கின்றன. காரணத்தை அவர்கள் சொல்லப்போவதில்லை.

முதலாளித்துவம் மேன்மேலும் நெருக்கடியில் சிக்கி பிற்போக்காக மாறிவரும் காலத்தில், மக்கள் தீர்ப்பை வைத்து நடத்தும் பாராளுமன்ற ஆட்சிமுறையையும் வெறும் மேலோட்டமான, ஜனநாயகத்தின் முகத்திரையாக மட்டுமே வைத்திருக்க ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். அதன் பெயரளவிலான ஜனநாயகத் தன்மையையும்கூட படிப்படியாக நீக்கிவருகின்றனர். ஏனெனில் எஞ்சியிருக்கும் குறைந்த ஜனநாயக உரிமை களையும் பயன்படுத்தி மக்கள் தங்கள் எதிர்ப்புக் குரலை எழுப்புவார்கள். எனவே மக்கள் தாங்கள் விரும்பும் கட்சியை தேர்ந்தெடுக்க அனுமதிக்க ஆளுவோர் விரும்பவில்லை. ஆளும் வர்க்கமும் அதன் அடிவருடிக் கட்சிகளும் பணபலம் ஆட்பலம் ஊடக பலம் நிர்வாக பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி முறைகேடுகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு வருகிறது. தற்போது தொழில்நுட்ப பலத்தையும் பயன்படுத்த விழைகிறது. இதன் மூலம் நூதனமாக முறைகேடுகளை செய்யமுடியும். எனவேதான், இரவைப் பகலாக்குவதுபோல் புதிய தொழில் நுட்பங்கள் வந்துவிட்டன, அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என தேர்தல் கமிஷனும் ஆளும் பாஜக தலைவர்களும் தொடர்ந்து பேசிவருகின்றனர் ■

# இந்திய மறுமலர்ச்சியின் சமூக அரசியல் பின்னணியும்...

6ம் பக்கத் தொடர்ச்சி

முன்பு புரட்சிகரமாக இருந்த பூர்ஷ்வா மனிதத்துவத் தத்துவம் பின்பு, மதத்தோடும் சமூக அநீதிகளோடும் சமரசம் செய்யத் தொடங்கியது. உலக முதலாளித்துவம் தேய்ந்துகொண்டிருந்த இந்தக் காலகட்டத்தில்தான் இந்திய முதலாளித்துவம் தோன்றி வளர்ந்தது. தேசியம், தனிநபர் சுதந்திரம் மற்றும் மனிதத்துவம் போன்றவையும் இந்தியாவில் இக்காலகட்டத்தில் வளர்ந்தன. உலக முதலாளித் துவ வர்க்கக் கோட்பாட்டின் பங்கும் பகுதியுமாக இந்தக் கருத்துகள் எல்லாம் நமது நாட்டில் தாமதமாக, முதலாளித்துவத்தின் பிற்போக்கான காலகட்டத்தில் வெளிப்படத் துவங்கியதால், தொடக்கத்தில் இருந்தே இதில் இரண்டு இணையான சிந்தனைப்போக்குகள் இருந்ததை நாம் காணலாம். அதாவது முதலாளித்துவத்தின் பொற்காலத்தில் மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் மனிதத்துவக் கோட்பாடு, புரட்சிகரமானதாக தோன்றி வளர்ந்தது. ஆனால் அழுகிப்போன பிற்போக்கு முதலாளித்துவ காலகட்டத்தில் காலாவதியாகிப்போன கருத்துகளும் எண்ணங்களும் கொண்டதாக மனிதத்துவம் மாறியது. அது மதத்தோடு சமரசம் செய்ய முயற்சித்துக்கொண்டும், இனவெறிவாதத்தின் பக்கம் சாய்ந்துகொண்டும், ஆன்மீகவாதத்தை நோக்கிச் செல்கின்ற மனிதத்துவமாக இந்தியாவில் வளர்ந்தது. ஆக, முதலாளித்துவ மனிதத்துவத்தின் முற்போக்கு மற்றும் பிற்போக்குக் கோட்பாடுகள் இரண்டுமே இணையாக இந்தியாவில் வளர்ந்தன.

....நமது நாட்டின் மறுமலர்ச்சிக் காலகட்டத்தில், அதாவது விடுதலைப் போராட்டம் மற்றும் பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி சகாப்தத்தில், வரலாற்றுக் காரணங்களால், தேசிய பூர்ஷ்வாக் களின் கண்ணோட்டம், பிரதானமாக, ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக தீவிரமாக இல்லாமல் தாராளவாத, சீர்திருத்தவாத எதிர்ப்பாகவே இருந்தது. எனவே முதலாளித்துவப் புரட்சியின் ஆரம்ப காலத்திய புரட்சிகரக் கருத்துகள், நமது நாட்டின் குட்டி முதலாளித்துவக் கிளர்ச்சிகளில் பிரதிபலித்தது. ரவீந்திரநாத் மற்றும் காந்திஜியின் சிந்தனை களிலும் கருத்துகளிலும் தேசிய முதலாளிகளின் தாராளவாத, சீர்திருத்தவாத மற்றும் சமரசவாதக் கண்ணோட்டம் மேலோங்கி இருந்தது. ஆனால் சரத்சந்திரர், நஸ்ரூல், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரின் சிந்தனைகள் மற்றும் கருத்துகளில் இந்த, குட்டி முதலாளித்துவப் புரட்சிகரவாதம் பிரதிபலித்தது. சமுதாயத்தில் எந்த ஒரு தனிநபரின் சிந்தனையும், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், யதார்த்தத்தில் ஒடுக்கும் வர்க்க அல்லது ஒடுக்கப்படும் வர்க்க சிந்தனைக்கு உட்பட்டதே என்பதையும் அவர்கள் அறியவில்லை.

இந்த யதார்த்த உண்மையை நாம் ஏற்க மறுத்தால், பின்னர் எந்த வர்க்கத்திற்கு சேவை செய்ய விரும்பவில்லையோ அந்த வர்க்கத்தின் சிந்தனைக்கு தனக்கே தெரியாமலேகூட ஒருவர் ஆட்பட்டுவிடக்கூடும் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# சிரியா மீதான பொருளாதார ராணுவத் தடைகளை நீக்கு!

## சர்வதேச அரங்கில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் ஸ்ரீதர் உரை

*சமீபத்தில் பிப்ரவரி மாதம் சிரியாவில் ஏற்பட்ட பலத்த நிலநடுக்கத்தால் சுமார் **60,000** பேர் மடிந்தனர், மிகப் பெரிய பொருட்சேதமும் ஏற்பட்டது. ஏற்கெனவே நீண்ட போர்களால் மீளமுடியாத நெருக்கடியில் சிக்கியிருக்கும் அந்நாட்டிற்கு இந்த இயற்கை பேரழிவு மிகுந்த துயரமாகும். இந்நேரத்திலும் அந்நாட்டின்மீது தடைகளைத் தொடரும் ஏகாதிபத்திய நாடுகளை உலகமுழுவதிலிருந்தும் ஜனநாயக சக்திகள் கண்டிக்கத் தவறவில்லை. இப்பின்னணியில் சென்ற மாதம் மார்ச்சில் அரேபிய சர்வதேச பாபுலர் பிரச்சார குழுவின்* (Arab International Popular Campaign) *தயாரிப்பு குழு சர்வதேச உறுப்பினர்களின் பிரத்தியேகக் கூட்டம் ஆன்லைனில் நடைபெற்றது. சிரியாவிற்கு எப்படியெல்லாம் ஆதரவளிக்கலாம், அதன்மீதான தடைகளை நீக்கக்கோரி என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என விவாதிப்பதற்காக இக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கத்தின் சார்பாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் ஸ்ரீதர் உரையாற்றினார்.*

அந்த உரையில், தென் துருக்கி மற்றும் வடசிரியா பகுதிகளில் இலட்சக்கணக்கில் மக்கள் இந்த நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர், அவர்கள் மனிதாபிமான உதவிகளை எதிர்ப்பார்த்து காத்துக்கிடக்கின்றனர் எனக் குறிப்பிட்டார். இந்த நேரத்தில், அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் சிரியாவில் உள்ளிறக்கியிருக்கும் சதிக்கும்பல்கள் சிரியாவிற்கு மேலும் சேதத்தை விளைவித்துள்ளன. சிரியாவிற்கு மிகச் சிறிய அளவில்தான் உதவிகள் கிடைத்துள்ளன என ஒப்புக் கொண்ட ஐநா, உலக நாடுகளுக்கு அதிக உதவி அளிக்க கோரிக்கை விடுத்துள்ளது. அனைத்து நாடுகளும் அரசியலுக்கு அப்பாற்பட்டு சிரிய மக்களுக்கு உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது. நாமும், சிரியாவிற்கு தாராளமாக அதிகமாக உதவிகளை அளிக்க வேண்டும் அதனை பல பகுதிகளுக்கும் உடனே சென்றடைய பகிர்வு வசதிகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும், சிரியாவை காப்பாற்ற வேண்டும் என அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

சிரியா, பல தேசிய இனங்களைக் கொண்ட பல மொழிகள் பேசும் மதச்சார்பற்ற நாடாகும். அப் பிராந்தியத்திலேயே அதிக கல்வியறிவு கொண்ட மக்களையும் இலவச மருத்துவ வசதிகளையும் கொண்டு சிறந்து விளங்கிய நாடு சிரியா. ஆனால் அங்கு அமெரிக்க ஏகாதிபத்தியக் கூட்டாளிகள் சதிக்கும்பலுக்கு நிதி வழங்கி உள்நாட்டுப்போரைத் தூண்டி சுமார் **1.5%** மக்களைக் கொன்றுவிட்டது. இதனால் சிரிய மக்கள் கடும் துன்பத்திற்கும் நெருக்கடிக்கும் தள்ளப்பட்டனர். அமெரிக்க ராணுவ சக்திகளால் பிடிக்கப்பட்ட பகுதிகளில் எண்ணைக் கிணறுகளைக் கைப்பற்றி தொடர்ந்து எண்ணை திருடப்படுகிறது. பல எண்ணைக் கிணறுகள் சேதமாக்கப்பட்டன. இதனால் எரிசக்தியின்றி நாளொன்றுக்கு சில மணித்துளிகள் மட்டுமே மின்சாரம் கிடைக்கின்ற நிலைக்கு அந்த எண்ணை வள நாடு கீழே தள்ளப்பட்டது. நிலநடுக்கத்திற்கு முன்பே பள்ளிகள் மருத்துவமனைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. நிலநடுக்கம் நிலைமையை இன்னமும் மோசமாக்கிவிட்டது.

முன்பு ஈராக்கிலும் லிபியாவிலும் செய்ததுபோன்று சிரியாவில் தனது பொம்மை அரசாங்கத்தை சதிகாரர்கள் மூலம் நிறுவும் அமெரிக்காவின் முயற்சி இன்னமும் கைகூடவில்லை. அதற்கான சூழ்நிலை தொடர்ந்து உருவாக்கப்படுகிறது. மக்களின் நாட்டுப்பற்றைக் கொண்டு சிரியா தனது எல்லையை கடுமையாகப் போராடி இதுவரை காத்து வருகிறது. தனது நட்புநாடுகளான ரஷ்யா, ஈரான், லெபனான் ஆகியவற்றின் உதவியுடன் அமெரிக்கப் படைகளை எதிர்கொண்டு வருகிறது. உள்நாட்டு மக்களின் ஒற்றுமையைக் குலைக்க, ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிறார்கள் என்றும் அவர்களை ஆட்சியிலிருந்து தூக்க வேண்டும் என்றும் சதிகாரர்களைக் கொண்டு அமெரிக்கா பிரச்சாரம் செய்கிறது. உள்நாட்டுப் போரை உருவாக்கி ஆயுத உதவிகளை செய்து ஏராளமான உயிர் மற்றும் பொருட்சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

நுகர்வுச் சந்தை சுருங்கிவிட்டதால் ராணுவச்சந்தையை விரிவாக்க, முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் உலகமுழுதும் போர்களைத் தூண்டிவிடுகின்றன. லாபவேட்டையாடும் இந்நாடுகளின் போர்கள் உலகில் பெரும் இடையூறுகளாக, பெரும் தொல்லைகளாக உருவாகி மக்கள் வாழ்வைச் சீரழிக்கின்றன. இப்போர்களுக்கு முடிவுகட்ட சர்வதேச சமுதாயம் ஒன்றுபட்டு குரலெழுப்பவது மட்டுமின்றி தங்களை அமைப்புரீதியாக ஒன்றுதிரட்டிக் கொள்ள வேண்டும். அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கத்திலிருந்து எங்கள் கோரிக்கை, உடனடியாக நிரந்தரமாக சிரியாவின்மீதான அனைத்து தடைகளும் நீக்கப்படவேண்டும், இந்த இலக்கை எட்ட உலக மக்களும் தத்தமது நாடுகளை வலியுறுத்த வேண்டும் என்பதாகும் ■

**ஏகாதிபத்தியம் ஒழிக!**

**உழைக்கும் மக்களின் சர்வதேச ஒற்றுமை ஓங்குக!**

# மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்

மார்ச் **8, 2023** அன்று காலை அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி சார்பாக சென்னையில் உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றம் அரங்கில் மாநில அளவிலான பெண்கள் கூட்டம் நடத்தப்பட்டது. சென்னையின் பல்வேறு கல்லூரிகளிலிருந்து திரளாக மாணவிகளும், சென்னை, மதுரை, தேனி, விழுப்புரம் உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்து சங்கத்தின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



**மார்ச் 8, 2023 அன்று சென்னையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினக்கூட்டத்தில் கலந்துகொண்டோர்**

கூட்டத்திற்கு சென்னை மாவட்ட உறுப்பினர் மஹாலக்ஷ்மி தலைமை தாங்க, தனது தொடக்க உரையில், ஏஐஎம்எஸ்எஸ்–ன் தமிழ்நாடு மாநில கன்வீனர் திருமதி ஹில்டா மேரி மகளிர் தின வரலாற்றை நினைவு கூர்ந்து பெண்களுக்கான பிரச்சினைகளுக்காக அனைவரும் போராட முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். பின்னர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் நாகஷீலா பேசுகையில் அரசியல் அமைப்பு சட்டம் பற்றி விளக்கி, சட்ட மாற்றங்கள் மட்டுமே தீர்வாகாது என்றும், ஆதிக்க, ஆணாதிக்க மனோபாவத்தை ஒழித்தால் மட்டுமே சமத்துவ சமுதாயம் மலரும் என்பதை விளக்கியுரைத்தார். அடுத்ததாக, பேராசிரியை முனைவர் லதா அவர்கள் அழகு தமிழில் கவிதைகள், பாடல்கள் பாடி, பெண்ணியத்தின் பல்வேறு வகைகளை விளக்கி பாரதியை மேற்கோள் காட்டி தாழ்மைப்படுத்தும் மனிதர்களிடமிருந்து பெண்கள் விலகியிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பின்னர் பேசிய பேராசிரியை முனைவர் ரம்யா, தேவதாசி முறையை ஒழிக்கப்பாடுபட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, கென்யாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் வாங்கரி மாத்தாய் ஆகியோரின் போராட்டத்தை நினைவு கூர்ந்து, பெண்கள் கல்வி கற்று சுயமரியாதையுடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார். இறுதியாக சென்னை மாவட்ட பொறுப்பாளர் சுஜாதா பெண்கள் ஒன்றிணைந்து போராட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்து நன்றி கூறி கூட்டத்தை முடிக்க பரதநாட்டியம், சிலம்பம், கவிதைகள், பாடல்களுடன் கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளுடன் கூட்டம் நிறைவுற்றது ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**